# உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பொது நூலகங்களில் "ஒக்டோபர் – தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்.

## 01. அறிமுகம்

2004ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியதுடன், 2021 ஆம் ஆண்டுக்குரிய ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்** மற்றும் **விசேடமான செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல பொது நூலகங்களிடமும் கோரப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் பரவியுள்ள கொவிட் - 19 (COVID - 19) தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மன உறுதியைக் கட்டியெழுப்ப **"தொலைதூர வாசிப்பு"** என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இவ் வருடத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு முன்மொழியப்பட்ட செயற்திட்டங்களை 2021.06.01 முதல் 2022.01.31 வரை செயல்படுத்தப்படல் வேண்டும்.

## 02. வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக பல்வேறுப்பட்ட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழுவொன்றை நியமித்தல் முந்தைய ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் தற்போதைய சுகாதார சூழலில் நூலக ஊழியர்கள் ஒரு முக்கிய வழிநடத்தல் குழுவாகச் செயற்படுத்தல் மிகவும் பொருத்தமானதாகும். தற்பொழுது நூலக்குழு ஒன்று காணப்படுமானால் அக் குழுவின் மூலமும் மற்றும் வாசகர் சமூகத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## 03. தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்த முடியுமான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- தற்காலத்தில் முக்கியமான நூலகத்தில் உள்ள பல்வேறுப்பட்ட நூல்களை இனங்காணல்.
- அப் புத்தகங்களின் தொகுப்பினை விசேட திட்டத்தின் கீழ் ஒழுங்கமைத்து வருடம் முழுவதும் விளம்பரப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்தல். Online மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் வாசகர்களுக்கு அறிவித்தல்.
- சுற்றுச் சூழல், விவசாயம் மற்றும் புதிய கண்டுப்பிடிப்புக்களில் ஈடுபடும் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் பட்டியல்களை தொகுத்தல்.

  உதாரணம் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) / கண்டுபிடிப்பாளர்கள் சங்கம்.
- பல்வேறுபட்ட நோய்களுக்கான தற்பாதுகாப்பு முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள், கை வைத்தியம், சுதேச மருத்துவம் பற்றி எழுதப்பட்ட புத்தகங்கள் / கட்டுரைகளைத் தொகுத்து அவற்றை சமூக ஊடகங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் விளம்பரப்படுத்தல்.

- உணவு பாதுகாப்பிற்காக வீட்டு நுகர்விற்கு பொருத்தமான பயிர்கள் மற்றும் தாவரங்கள் பற்றி விழிப்புணர்வூட்டுவதுடன் அப்பயிர்களை வளர்ப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குதல். உதாரணம் - பயிர் சாகுபடி செய்யும் முறை / பூச்சிக் கட்டுப்பாட்டு முறை
- வாசகர் சமூகத்தில் ஒவ்வொரு வாசகர்களின் வீடுகளிலும் (நகர்ப்புறமாக இருந்தால் தொட்டிகளில்) வீட்டுத் தோட்டங்களை செய்வதற்கு ஊக்குவித்தல் மற்றும் வீட்டுத்தோட்ட போட்டிகளை ஒழுங்கமைத்தல். (நூலகத்திற்கு அண்மையில் ஒரு மாதிரி வீட்டுத் தோட்டத்தை அமைத்தல்)
- இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மேற்கண்ட திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் தகவல்களை விளம்பரப்படுத்தல்.
- நூலகத்தின் மூலம் இனையத்தினூடாக வாசகர்களின் படைப்புகளை வெளியிடுவதற்கான மன்றங்ளை நிறுவுதல்.
- தொனிப்பொருளுடன் தொடர்பான பல்வேறுபட்ட போட்டிகளை நடத்துதல். (கட்டுரை போட்டி, சித்திரப் போட்டி)
- உள்ளூராட்சி பிரதேசத்திற்குட்பட்ட ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் என்ற கருத்திற்கு அமைவாக குறைந்தது ஒரு புத்தக அலமாரி கொண்ட நூலகம் ஒன்றினை உருவாக்கல். இதற்காக பயனுள்ள பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நூலக முகநூல் (Face Book) பக்கத்துடன் இதுவரை இணையாத வாசகர்களை அடையாளம் கண்டு அவர்களை முகநூல் பக்கத்துடன் இணைத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் முகநூலில் வாசிப்பு தொடர்பான மேற்கோள் உரைகள் மற்றும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளல்.
- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறுப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுதல்.
- உள்ளூரில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய கருத்துக்கள் மற்றும் யோசனைகளை கொண்டு வரும் சிறுவர்கள் மற்றும் பொதுமக்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சிறுவர்களின் ஆக்கப்பூர்வமான படைப்புகளின் பொருட்டு கையெழுத்து பிரதிப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- அதிக மகிழ்ச்சியை வாசகர்களுக்கு வழங்குவதற்காக பல்வேறுப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். (வானொலியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இசை நிகழ்ச்சிகள் / நாடகம் / இலக்கிய மீளாய்வுகள் போன்ற நிகழ்ச்சிகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் அவற்றை கேட்பதற்கும் ஊக்குவித்தல்.)
- வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக ஏனைய ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

## 04. நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

இத்திட்டங்களை செயல்படுத்தும் போது, சுகாதார அமைச்சினால் வெளியிடப்படுகின்ற புதுப்புக்கப்பட்ட கொவிட் -19 (CODID-19) சுகாதார வழிகாட்டிகள் மற்றும் சுற்றறிக்கைகளை பின்பற்றுவது நல்லது.

**05. நிதி**

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்த தேவையில்லை. தேவைப்படும் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் அல்லது நூலகத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**06. அறிக்கை தாயரித்தல்.**

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றினை (அச்சு/இருவெட்டு மூலம்) குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசுடன் **2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28** ஆந் திகதிக்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம் 14, சுதந்திர வழி, கொழும்பு** 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- தேசிய வாசிப்பு மாதத்தில் வெற்றி பெற்ற நுலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அடிப்படையாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய வாசிப்பு ஊக்குவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாத்திரம் புள்ளிகளைப் பெற்றுக்கொடுக்கும் முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. அதனால் நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்ட ஏனைய சமுதாயஞ் சார் சேவைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையினை அதில் சேர்த்தல் கூடாது. உதாரணம் : சிரமதானம் / தன்ஸல் / இரத்த தானம் வழங்குதல்என்பவை.
- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு ஆதாரங்களுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

**07. மதிப்பீடு**

- தேசிய வாசிப்பு மாதத்தின் 2021 வினைத்திறன் மிக்க நிகழ்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2022 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது பரிசுகள், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படுகின்றது. மதிப்பீட்டு நடவடிக்கைகள் நூலக மட்டங்களில் இடம்பெறுவதனால் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய பொது நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்கள் வெவ்வேறாக தங்களது அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும். இறுதியாக தேர்ந்தெடுக்கப்படும் நூலகங்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் மதிப்புரை வழங்கப்பட்டதன் பின்னர் விருதுகளுக்கு உரித்துடைய நூலகங்கள் எவை என தீர்மானிக்கப்படும்.


சொனால குணவர்தன
தலைவர்

Sonala Gunawardana
Chairman
National Library & Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

தொடர்புகளுக்கு :-தொலைபேசி இலக்கம் – 011 3610774
இணையத்தளம்–www.natlib.lk